Reg. No. KL/TV(N)/12



KERALA GAZETTE

SUPPLEMENTS

PUBLISHED BY AUTHORITY

Vol. XXVII] Trivandrum, Tuesday, 15th June 1982 / 25th Jyaistha 1904 (Saka) [No. 24

PART I

CONTENTS

Kerala Gazette No. 24 dated 15th Jnue 1982.
PART I   Section iii

கேரள அரசு

சட்டம் (சட்டமியற்றல்-சி) துறை

அறிவிக்கை

எண். 10151/சட்டமியற்றல் (சி) 3/77/சட்டம்.

திருவனந்தபுரம், 1980 அக்டோபர் 3 / 1902 அஸ்வினு 11

கேரள மாநில சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டம் பொதுத் தகவலுக்கென இதனால் பிரசுரிக்கப்படுகிறது. சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய மசோதாவிற்கு 1980 செப்டம்பர் 28-ம் நாள் குடியரசுத் தலைவரின் அனுமதி கிடைக்கப்பெற்றது.

ஆளுநர் ஆணைப்படி,
கெ. விஸ்வநாதன் நாயர்,
தனிச் செயலாளர் (சட்டம்).

The Kerala Head Load Workers Act 1978

1980-ன் 20-வது சட்டம்

1978-ன் கேரள சுமட்டுத்தொழிலாளிகள் சட்டம்

கேரள மாநிலத்திலுள்ள சுமட்டுத்தொழிலாளிகளின் வேலையை ஒழுங்குபடுத்துவதற்கும் அவர்களின் நலனுக்கு வகை செய்வதற்கும், அவர்களில் வேலை அல்லது வேலையில்லாமை சம்பந்தப்பட்ட தகராறுகளைத் தீர்ப்பதற்கும் அவை சம்பந்தப்பட்டக் காரியங்களுக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்

தோற்றுவாய்.—கேரள மாநிலத்திலுள்ள சுமட்டுத்தொழிலாளிகளின் வேலையை ஒழுங்குபடுத்துவதற்கும், அவர்களின் நலனுக்கு வகை செய்வதற்கும் அவர்களின் வேலை அல்லது வேலையில்லாமை சம்பந்தப்பட்டத் தகராறுகளைத் தீர்ப்பதற்கும், அவை சம்பந்தப்பட்டக் காரியங்களுக்கும் வகை செய்வது உகந்ததென்பதால்,

இந்தியக் குடியரசின் இருபத்தொன்பதாவது ஆண்டில் இது பின்வருமாறு சட்டமாக்கப்படட்டும்.

அத்தியாயம் 1

முன்னுரை.

1. சுருக்கத் தலைப்பு, விரிவு மற்றும் ஆரம்பம்.—(1) இச்சட்டம் 1978-ன் கேரள சுமட்டுத்தொழிலாளிகள் சட்டம் என அழைக்கப்படலாம்.

(2) இது கேரள மாநிலம் முழுவதும் வியாபிக்கும்.

(3) கெசட்டில் விளம்பரம் செய்வதன்மூலம் அரசு நிச்சயிக்கக்கூடிய நாளன்று இது அமலுக்கு வரும். வெவ்வேறு பகுதிகளுக்காகவும் இச்சட்டத்தின் வெவ்வேறு ஏற்பாடுகளுக்காகவும், வெவ்வேறு நிறுவனங்களுக்காகவும் வெவ்வேறு தேதிகள் நிச்சயிக்கப்படலாம்.

2. உரைவிளக்கங்கள்.—சந்தர்ப்பம் மாறுகத் தேவைப்படாலன்றி இச்சட்டத்தில்—

(ஏ) "இளைஞர்" எனில் பதினைந்து வயது பூர்த்தியானவரும் பதினெட்டு வயது பூர்த்தியடையாதவருமான நபர் எனப் பொருள்படும்,

(பி) "வயது வந்தவர்" எனில் பதினெட்டு வயது பூர்த்தியான நபர் எனப் பொருட்படும்,

(சி) "மேல்முறையீட்டு அதிகாரி" எனில் ஏதேனும் பகுதி சம்பந்தமாக அப்பகுதிக்கெனப் பிரிவு 4-ன் கீழ் நியமிக்கப்பட்ட மேல்முறையீட்டு அதிகாரி எனப் பொருட்படும்,

(டி) "வாரியம்" எனில் பிரிவு 14-ன் கீழ் அமைக்கப்பட்ட வாரியம் எனப் பொருட்படும்,

(இ) "கமிட்டி" எனில் பிரிவு 18-ன் கீழ் அமைக்கப்பட்ட ஒரு கமிட்டி என்று பொருட்படும்,

(எப்) "இசைவிணக்க அதிகாரி" எனில் ஏதேனும் பகுதி சம்பந்தமாக அப்பகுதிக்கெனப் பிரிவு 3-ன் கீழ் நியமிக்கப்பட்ட இசைவிணக்க அதிகாரி எனப் பொருட்படும்.

(ஜி) ஒரு நிறுவனம் சம்பந்தமாக "கண்டிராக்டர்" எனில் வாடகைக்கோ அல்லது வேறு விதத்திலோ சுமட்டுத்தொழிலாளிகளை ஏற்படுத்தி இத்தகைய நிறுவனத்திற்கான ஏதேனும் வேலையை நிறைவேற்றும் பணியினை ஏற்றுக்கொண்டுள்ள ஒரு நபர், அல்லது இத்தகைய நிறுவனத்தின் பணிக்கு ஏற்பாடு செய்வதற்கென சுமட்டுத்தொழிலாளிகளைத் தனியாகவோ அல்லது கூட்டமாகவோ வழங்குகின்ற நபர் எனவும் சப் கண்டிராக்டர் மற்றும் தரகர் எனவும் பொருட்படும்,

(எச்) "தகராறு" எனில், ஏதேனும் சுமட்டுத்தொழிலாளியின் வேலை அல்லது வேலையில்லாமை அல்லது வேலை நிபந்தனைகள் அல்லது கட்டுப்பாடுகள் சம்பந்தமாக முதலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் இடையேயோ அல்லது முதலாளிகளுக்கும் சுமட்டுத்தொழிலாளிகளுக்கும் இடையேயோ அல்லது சுமட்டுத்தொழிலாளிகளுக்கும் சுமட்டுத்தொழிலாளிகளுக்கும் இடையேயோ ஏற்படும் தகராறு அல்லது கருத்து வேற்றுமை எனப் பொருட்படும்.

விளக்கம்.—எந்த முதலாளியேனும் தனிப்பட்ட ஒரு சுமட்டுத்தொழிலாளியை வேலையினின்றும் பிரித்துவிட்டால், நீக்கிவிட்டால், ஆட்குறைப்புச் செய்தால் அல்லது வேறு விதத்தில் அவரது பதவியை நிறுத்திவிட்டால் அல்லது அவருக்கு வேலை கொடுக்க மறுத்தால் இவ்வாறு பிரித்துவிடல் நீக்கம் செய்தல், ஆட்குறைப்புச் செய்தல் அல்லது பதவியை நிறுத்துதல் அல்லது வேலை கொடுக்க மறுத்தல் சம்பந்தமாக அல்லது அதன்மூலம் அந்தச் சுமட்டுத்தொழிலாளிக்கும் அவரது முதலாளிக்கும் இடையே ஏற்படுகின்ற ஏதேனும் தகராறு அல்லது கருத்து வேற்றுமை, வேறு எந்தச் சுமட்டுத்தொழிலாளியும் அல்லது சுமட்டுத்தொழிலாளர் சங்கமும் அந்தத் தகராறில் ஒரு கட்சியல்லவென்பது எவ்வாறிருப்பினும்—ஒரு தகராறுகக் கருதப்படும்,

(ஐ) "முதலாளி" எனில்—

(i) ஒரு கண்டிராக்டரால் அல்லது அவர் மூலம் நியமிக்கப்பட்ட ஒரு சுமட்டுத்தொழிலாளியின் காரியத்தில் தலைமை முதலாளி, என்றும்

(ii) ஏதேனும் முதலாளியால் அல்லது கண்டிராக்டரால் நியமிக்கப்படாத ஒரு சுமட்டுத்தொழிலாளியின் காரியத்தில் பிரிவு 13-ன் கீழ் நியமிக்கப்பட்ட கமிட்டி எனும், மற்றும்

(iii) ஏனைய பிற சுமட்டுத்தொழிலாளியின் காரியத்தில் சுமட்டுத்தொழிலாளி வேலையிலமர்த்தப்பட்ட நிறுவனத்தின் காரியத்தில் கட்டுப்பாடுடைய நபர் என்றும் பொருட்படுவதுடன் அத்தகைய நபர், அத்தகைய நிறுவனத்தில் ஒரு ஏஜன்டாகவோ, மானேஜராகவோ அல்லது அமலிலுள்ள ஏனைய பிற பெயரில் அழைக்கப்படினும் அத்தகைய நிறுவனத்தின் காரியங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ள நபரும், உட்படுவார்,

(ஜெ) ''நிறுவனம்'' எனில் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிறுவனம் என்பதுடன் அதன் சுற்றுப்புறமும் உட்படும்,

(கெ) ''குடும்பம்'' எனில், கணவன், மனைவி, அவர்களைச் சார்ந்திருக்கும் பெற்றோர், வயது வராத குழந்தைகள் மற்றும் மணமாகாத அல்லது விதவையான மகள் எனப் பொருட்படும்,

(எல்) ''நிதி'' எனில் ஒரு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட ஒரு நிதி எனப் பொருட்படும்.

(எம்) ''சுமட்டுத்தொழிலாளி'' எனில் கூலிக்காகவோ அல்லது கூலியில்லாமலோ, ஒரு வாகனத்தில் அல்லது ஒரு நிறுவனத்தில் அல்லது வாகனத்திலிருந்தோ அல்லது நிறுவனத்திலிருந்தோ அல்லது வாகனத்திற்கோ அல்லது நிறுவனத்திற்கோ ஏதேனும் பொருள் அல்லது பொருட்களை ஏற்றவோ இறக்கவோ அல்லது தலைமீதோ அல்லது உடல் மீதோ அல்லது டிராலியிலோ சுமந்து செல்வதற்காக நேரடியாகவோ அல்லது கண்டிராக்டர் மூலமாகவோ அத்தகைய நிறுவனத்தில் அல்லது நிறுவனத்திற்காகப் பணியில் ஈடுபடும் ஒரு நபர் எனப் பொருட்படும் என்பதுடன் ஏதேனும் முதலாளியால் அல்லது கண்டிராக்டரால் வேலையில் அமர்த்தப்படாத ஆனால் கூலிக்காக ஏதேனும் பொருள் அல்லது பொருட்களை ஏற்றவோ, இறக்கவோ அல்லது தலை மீதோ உடல்மீதோ அல்லது டிராலியிலோ சுமந்து செல்வதற்காகவோ ஈடுபடுத்தப்பட்டுள்ள ஏதேனும் நபர் உட்படுவார், ஆனால் ஒரு தனி நபரால் தனது சொந்தக் காரியத்திற்காக அமர்த்தப்படும் நபர் உட்படமாட்டார்,

(என்) ''இன்ஸ்பெக்டர்'' எனில் பிரிவு 5-ன் கீழ் நியமிக்கப்பட்ட இன்ஸ்பெக்டர் எனப் பொருட்படும்,

(ஓ) ''வயதுவராதவர்'' எனில் பதினைந்து வயது பூர்த்தியாகாத நபர் எனப் பொருட்படும்,

(பி) ''தலைமை முதலாளி'' எனில் ஏதேனும் நிறுவனத்தில் ஒரு கண்டிராக்டரால் அல்லது கண்டிராக்டரின் மூலம் ஒரு சுமட்டுத்தொழிலாளியை நியமிக்கும் ஒரு முதலாளி எனப் பொருட்படும்,

(க்யு) ''குறிப்பிடப்பட்ட'' எனில் இச்சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட எனப் பொருட்படும்,

(ஆர்) ''திட்டம்'' எனில் இச்சட்டத்தின் கீழான ஒரு திட்டம் எனப் பொருட்படும்,

(எஸ்) ''கூலி'' எனில், வேலையின் நிபந்தனைகள் தெளிவாக அல்லது பொருள்படுமாறு நிறைவேற்றப்பட்டால், ஒரு நிறுவனத்தில் அல்லது அத்தகைய நிறுவனத்தில் செய்யப்பட்ட பணிக்காக நியமிக்கப்பட்ட ஒரு சுமட்டுத்தொழிலாளிக்குப் பணமாகவோ பொருளாகவோ கொடுக்கப்படுகின்ற எல்லாக் கைமாறுகளும் எனப் பொருட்படும், ஆனால்,—அதனில்

(i) (எ) ஏதேனும் வீட்டுவசதி, மின்சாரம், குடிநீர் அல்லது மருத்துவ வசதியின் மதிப்போ அல்லது

(பி) அரசின் பொது அல்லது விசேட உத்தரவினால் விலக்கப்பட்ட வேறு ஏதேனும் வசதி அல்லது பணியின் மதிப்போ, அல்லது

(ii) ஏதேனும் ஓய்வூதிய நிதிக்கோ அல்லது ஏதேனும் சமுதாய இன்ஷூரன்ஸ் திட்டத்திற்கோ முதலாளியால் செலுத்தப்படும் ஏதேனும் உதவித் தொகையின் மற்றும் அதன்மீதான வட்டியின் மதிப்போ, அல்லது

(iii) ஏதேனும் பயணப்படி அல்லது ஏதேனும் பயணச்சலுகையின் மதிப்போ, அல்லது

(iv) ஒரு கமட்டுத்தொழிலாளியின் வேலையின் தன்மையினால் ஏற்படும் விசேடச் செலவைச் சமாளிப்பதற்கென அவருக்குக் கொடுக்கப்படும் ஏதேனும் தொகையின் மதிப்போ, அல்லது

(v) வேலையை விடும்போது கொடுக்கப்படும் ஏதேனும் பணிக்கொடையின் மதிப்போ, அல்லது

(vi) ஏதேனும் போனஸின் மதிப்போ, உட்படாது.

அத்தியாயம் II

இசைவிணக்க அதிகாரிகள், மேல்முறையீட்டு அதிகாரிகள் மற்றும் இன்ஸ்பெக்டர்கள்

3. இசைவிணக்க அதிகாரிகளை நியமித்தல்.—இச்சட்டத்தின் மூலம் அல்லது அதன் கீழ் இசைவிணக்க அதிகாரிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அலுவல்களை நிறைவேற்றும் பொருட்டு அரசு, கெசட்டில் விளம்பரம் செய்வதன் மூலம், அதனில் குறிப்பிடக்கூடிய எந்தப் பகுதிக்கும் ஒரு துணை தொழிலாளர் நல அதிகாரியின் தரத்திற்குறையாத தொழிலாளர் துறையின் ஒரு அதிகாரியை இசைவிணக்க அதிகாரியாக நியமிக்கலாம்.

4. மேல்முறையீட்டு அதிகாரிகள்.—இச்சட்டத்தின் கீழ் மேல்முறையீட்டு அதிகாரியின் அலுவல்களை நிறைவேற்றும் பொருட்டு அரசு, கெசட்டில் விளம்பரம் செய்வதன்மூலம், அதனில் குறிப்பிடக்கூடிய எந்த பகுதிக்காகவேனும் மாவட்ட தொழிலாளர் நல அலுவலர் தரத்திற்குறையாத தொழிலாளர் துறையின் ஒரு அதிகாரியை மேல்முறையீட்டு அதிகாரியாக நியமிக்கலாம்.

5. இன்ஸ்பெக்டர்கள்.—(1) அரசு, கெசட்டில் விளம்பரம் செய்வதன் மூலம், இச்சட்டத்தின் தேவைகளுக்காக இன்ஸ்பெக்டர்களாகவிருக்கத் தகுதியுடையவர்களுமான—

(எ) அத்தகைய அதிகாரிகளை அல்லது

(பி) குறிப்பிடப்பட்ட தகுதிகள் உடைய அத்தகைய நபர்களை, நியமிப்பதுடன், அவர்களது அதிகாரங்களைப் பிரயோகிப்பதற்கான தல எல்லையையும் குறிப்பிடலாம்.

(2) இதற்கென உருவாக்கப்படும் ஏதேனும் விதிகளுக்குட்பட்டு, இன்ஸ்பெக்டர், எந்தத் தல எல்லைக்கென அவர் நியமிக்கப்பட்டுள்ளாரோ அந்த தல எல்லைக்குள்,—

(எ) இச்சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் திட்டத்தின் கீழ் அல்லது விதியின் கீழ் பாதுகாக்க அல்லது வெளியிடத் தேவைப்பட்டுள்ள ஏதேனும் பதிவேட்டினையோ, கூலிக்கான பத்திரக்கையோ அல்லது அறிவிப்புக்

களையோ பரிசீலனை செய்யும் பொருட்டு சுமட்டுத் தொழிலாளிகள் நியமிக்கப்பட்டுள்ள நிறுவனத்திலோ அல்லது சுமட்டுத்தொழிலாளிகளுக்கு வேலை கொடுக்கப்பட்ட இடத்திலோ தகுந்தவரெனக் கருதும் உதவியாளர்களுடன் நியாயமான எல்லா நேரங்களிலும் பிரவேசிக்கலாம் என்பதுடன் அந்த இடத்திலோ அல்லது இன்ஸ்பெக்டரின் அலுவலகத்திலோ அவைகளைத் தாக்கல் செய்யுமாறு தேவைப்படவும் செய்யலாம்:

எனினும், அத்தகைய நிறுவனத்தில் வேலை நடந்துகொண்டிருக்கும் பொழுது தவிர இரவு 7 மணிக்கும் காலை 7 மணிக்கும் இடையே எச்சமயத்திலும் ஏதேனும் நிறுவனத்தில் இன்ஸ்பெக்டர் நுழையக்கூடாது.

(பி) ஏதேனும் நிறுவனத்தில் காணப்படும் ஏதேனும் நபர் அங்கு வேலைக்கென நியமிக்கப்பட்ட சுமட்டுத்தொழிலாளி எனவோ அல்லது அங்கு வேலை கொடுக்கப்பட்டவர் எனவோ நம்புவதற்குரிய நியாயமான காரணமிருந்தால் அத்தகைய நிறுவனத்திலுள்ள அத்தகைய எந்த நபரையும் பரிசோதனை செய்யலாம்,

(சி) ஒரு சுமட்டுத்தொழிலாளிக்கோ அல்லதுசுமட்டுத் தொழிலாளிகளின் கூட்டத்திற்கோ வேலை கொடுக்கின்ற ஒரு நபரிடம் அவ்வாறு வேலை கொடுக்கப்பட்ட ஒவ்வொரு நபரின் பெயர் மற்றும் முகவரி சம்பந்தமாகவும் அத்தகைய வேலைக்காகக் கொடுக்கப்பட்ட அல்லது கொடுக்கப்பட வேண்டிய தொகைகள் சம்பந்தமாகவும் தகவல் தேவைப்படலாம்.

(டி) இச்சட்டத்தின் கீழ் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட ஏதேனும் திட்டம் அல்லது விதியின் கீழ் ஒரு முதலாளி குற்றம் செய்துள்ளார் என நம்புவதற்குரிய காரணமிருந்தால் அது சம்பந்தமாக நமபகமானதெனக் கருதும் அத்தகைய பதிவேடுகளையோ, கூலி சம்பந்தமான பத்திரங்களையோ அல்லது அறிவிப்புகளையோ அல்லது அதன் பாகத்தையோ கைப்பற்றவோ அல்லது நகலெடுக்கவோ செய்யலாம்,

(இ) குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தலாம்.

(3) எல்லா முதலாளிகளும் இச்சட்டத்தின் கீழ் இன்ஸ்பெக்டர் உட்பிரவேசிப்பதற்கு, ஆய்வுக்கு, பரிசீலனைக்கு அல்லது விசாரணை செய்வதற்குரிய நியாயமான வசதிகள் நல்கவேண்டும்.

அத்தியாயம் III

வேலை மற்றும் கூலிக்கான நேரமும் வரையறைகளும்

6. வேலை நேரம்.—இச்சட்டத்தில் வேறு விதத்தில் தெளிவாக வகை செய்யப்பட்டவை தவிர, வயது வந்த எந்த ஒரு சுமட்டுத்தொழிலாளியும் எந்த நாளிலும் எட்டு மணி நேரத்திற்குமேல் வேலை செய்யத் தேவை இல்லை. மேலும், எந்த இளைஞரான அல்லது வயதுவராத சுமட்டுத்தொழிலாளியும் எந்த நாளிலும் ஆறு மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யத் தேவை இல்லை:

எனினும் அதது காரியத்திலாவதுபோல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் வேலை நாளிலோ அல்லது நாட்களிலோ அல்லது எல்லா நாட்களிலுமோ எட்டு மணி நேரத்திற்கோ அல்லது 6 மணி நேரத்திற்கோ குறைவாக வேலை செய்வது சம்பந்தமாக முதலாளிக்கும் சுமட்டுத்தொழிலாளிகளுக்கும் இடையே உள்ள ஒப்பந்தத்தை இப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும் தடை செய்வதாகவோ அல்லது

அதது காரியத்திலாவதுபோல் எந்த வட்டாரத்தில் எட்டு மணி நேரத்திற்குக் குறைவாகவோ அல்லது ஆறுமணி நேரத்திற்குக் குறைவாகவோ வேலை செய்யும்படி சுமட்டுத்தொழிலாளி தேவைப்படப்பட்டுள்ளாரோ அந்த வட்டாரத்தில், வழங்கப்பட்டுவரும் ஏதேனும் வழக்கத்தையோ அல்லது பழக்கத்தையோ பாதிப்பதாகவோ கருதப்படமாட்டாது.

7. வேலையின் வரையறை.—(1) எந்தச் சுமட்டுத்தொழிலாளியும் அவரது தலையிலோ உடலிலோ ஒரே நேரத்தில் எழுபத்தைந்து கிலோகிராமுக்கு கூடுதலாக எடையுள்ள பொருளை அல்லது பொருட்களை சுமக்கத் தேவைப்படக்கூடாது.

(2) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருந்தபோதிலும் அறுபது வயது கடந்த எந்த நபருக்கும் இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு சுமட்டுத்தொழிலாளிக்கு வழங்கப்பட்ட பலன்களைப் பெற உரிமை கிடையாது.

8. அன்றாட ஓய்வுக்கான இடைவேளை.—எந்த வேலை நேரமும் தொடர்ச்சியாக மூன்று மணி நேரத்திற்கு அதிகமாகாமலும் எந்தச் சுமட்டுத்தொழிலாளியும் குறைந்தது அரை மணி நேர ஓய்வு கிடைப்பதற்கு முன் தொடர்ந்து மூன்று மணி நேரத்திற்கு மேல் வேலை செய்யாமலும் இருக்கும் முறையில் ஒவ்வொரு நாள் வேலை நேரமும் நிர்ணயிக்கப்படவேண்டும்.

9. சுமட்டுத்தொழிலாளிகளுக்கு கொடுக்கப்படும் கூலி.—எல்லா முதலாளியும் அவரால் நியமிக்கப்பட்ட எந்தச் சுமட்டுத்தொழிலாளிக்கும் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய கூலி வழங்கவேண்டும் என்பதுடன் வெவ்வேறு நிறுவனங்களுக்கும் வெவ்வேறு பணிகளுக்கும் வெவ்வேறு கூலி குறிப்பிடப்படலாம்.

10. மாலை 7 மணிக்கும் காலை 7 மணிக்கும் இடையேயுள்ள வேலைக்கான கூலி.—ஏதேனும் சுமட்டுத்தொழிலாளி மாலை 7 மணிக்கும் காலை 7 மணிக்கும் இடையே உள்ள நேரத்தில் வேலை செய்யவேண்டுமென முதலாளியால் தேவைப்பட்டால் அத்தொழிலாளிக்கு அந்த வேலைக்கு பிரிவு 9-ன் கீழ் அவருக்கு நல்கப்படவேண்டிய கூலியின் ஒன்றரை மடங்கு கூலி நல்கப்படவேண்டும் :

எனினும் இந்தப்பிரிவில் ஒன்றும், பஸ் நிலையங்கள், போட் ஜட்டிகள், தோணிகள் இறங்கும் இடங்கள் மற்றும் இதன் சார்பில் அரசினால் குறிப்பிடப்படும் பிற இடங்களில் வேலை பார்க்கிற சுமட்டுத்தொழிலாளிகளுக்கு, பொருந்தாது.

11. கூலிகள் கொடுப்பதற்கான சட்டம்.—(1) ஏதேனும் முதலாளி ஒரு சுமட்டுத்தொழிலாளிக்குக் கொடுக்கவேண்டிய கூலியைவிடக் குறைவான கூலி கொடுத்தாலோ அல்லது அத்தகைய கூலி கொடுக்க மறுத்தாலோ சுமட்டுத்தொழிலாளியோ அல்லது அவர் ஒரு உறுப்பினராக உள்ள யூனியனின் ஒரு அதிகாரியோ துணைப்பிரிவு (2)-ன் கீழ் உத்தரவு பிறப்பிக்கும் பொருட்டு இசைவிணக்க அதிகாரிக்கு விண்ணப்பம் தாக்கல் செய்யலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஒரு விண்ணப்பம் பெற்றுக்கொள்வதன் மேல் இசைவிணக்க அதிகாரி விண்ணப்பதாருக்கும், முதலாளிக்கும் விசாரணை செய்யப்படுவதற்கான வாய்ப்பளித்தபின் மற்றும் தேவையென அவர் கருதும் விசாரணை ஏதேனும் உண்டெனில் அத்தகைய விசாரணை நடத்தியபின்,—

(எ) கொடுக்கப்படவேண்டிய கூலியை விடக்குறைவான கூலி கொடுக்கப்படும்போது ஏற்படும் உரிமைக்கோரிக்கையின் காரியத்தில், முதலாளி சுமட்டுத்தொழிலாளிக்குக் கொடுக்கப்படவேண்டிய கூலி உண்மையில் அவருக்கு முதலாளியால் கொடுக்கப்பட்ட தொகையைவிட எவ்வளவு அதிகமாக இருக்குமோ அவ்வளவு தொகையினைக் கொடுக்கவும்,

(பி) கூலி கொடுக்கப்படாதிருக்கும் போது எழுப்பப்படும் உரிமைக் கோரிக்கையின் காரியத்தில் சுமட்டுத் தொழிலாளிக்குச் சேரவேண்டிய கூலியும் கொடுக்கப்படவேண்டுமென உத்தரவிடவேண்டும்.

(3) துணைப்பிரிவு (2)-ன் கீழான உத்தரவின் பலனாக சுமட்டுந்தொழிலாளிக்கு ஏதேனும் தொகை கூலியாககொடுக்கப்படவேண்டியிருந்தால் இசைவிணக்க அதிகாரி, அவரது உத்தரவின்படி அத்தொகை கொடுக்கப்படாதிருந்தால் சுமட்டுத்தொழிலாளிக்குச் சேரவேண்டிய கூலியின் தொகை சம்பந்தமான முழு விவரங்களையும் குறிப்பிட்டுக் கலெக்டருக்கு அறிக்கை விடுவிக்கவேண்டும், மேலும், இத்தகைய அறிக்கை பெற்றுக்கொள்வதன் மேல் கலெக்டர், நிலத்தின் மீதான பொது வருவாய் நிலுவையெனுமாறு அதனை முதலாளியிடமிருந்து ஈடாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

விளக்கம்.—இத்துணைப்பிரிவிலும், பிரிவு 36-லும் "கலெக்டர்" எனில் 1968-ன் கேரள வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் (1968-ன் 15) ஒரு கலெக்டரின் அதிகாரங்களைப் பயன்படுத்தவும் அவரது அலுவல்களை நிறைவேற்றுவதற்கும் வேண்டி அரசினால் நியமிக்கப்பட்ட ஒரு மாவட்டக் கலெக்டர் அல்லது அத்தகைய வேறு ஏதேனும் அதிகாரி எனப் பொருட்படும்.

12. மேல்முறையீடு.—(1) பிரிவு 11-ன் கீழ் இசைவிணக்க அதிகாரியினால் பிறப்பிக்கப்பட்ட ஏதேனும் ஆணைக்கெதிராக அந்த ஆணையின் தேதியிலிருந்து முப்பது நாட்காலத்திற்குள் மேல்முறையீட்டு அதிகாரிக்கு ஒரு மேல்முறையீடு தாக்கல் செய்யலாம் என்பதுடன் மேல்முறையீட்டு அதிகாரியின் முடிவே இறுதி முடிவாக இருக்கும்:

எனினும் மேல்முறையீட்டதிகாரி அந்த கால அளவிற்குள் மேல்முறையீட்டினை தாக்கல் செய்யாமலிருக்க மேல்முறையீட்டாளருக்கு தகுந்த காரணம் இருந்தது என்று திருப்திப்பட்டால் மேற்சொன்ன முப்பது நாள் கால அளவு முடிந்த பின்னரும் தாக்கல் செய்யப்பட்ட ஒரு மேல்முறையீட்டினை அனுமதிக்கலாம்.

(2) மேல்முறையீடு முடிவுறுமலிருக்கும் போது எழுத்து வடிவில் பதிவு செய்யப்படக்கூடிய நல்ல, தகுந்த காரணங்களுடனல்லாது இசை விணக்க அதிகாரியின் உத்தரவு நிறைவேற்றப்படுவதைத் தடை செய்வதற்கு மேல் முறையீட்டு அதிகாரிக்கு அதிகாரம் கிடையாது.

அத்தியாயம் IV

திட்டங்கள்

13. திட்டம்.—(1) கெசட்டில் விளம்பரம் செய்வதன்மூலம் அரசு, விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்றோ அல்லது அதிகமோ பகுதிகளில் ஏதேனும் வேலை அல்லது வேலைகளின் தொகுதிக்காக ஒன்றோ அல்லது அதிகமோ திட்டங்கள் உருவாக்கலாம் என்பதுடன் இத்தகைய விளம்பரத்தின் மேல் இத்தகைய ஏதேனும் திட்டத்தில் எதையேனும் சேர்க்கவோ, திட்டத்தைத் திருத்தவோ அல்லது திட்டத்தை மாற்றி அமைக்கவோ செய்யலாம் அல்லது இத்தகைய ஏதேனும் திட்டத்திற்குப் பதிலாக வேறு ஏதேனும் திட்டத்தை அறிவிக்கவும் செய்யலாம்:

எனினும் இத்தகைய எந்த அறிவிக்கை சம்பந்தமாகவும் கெசட்டில் அதற்கான வரைவு பிரசுரிக்கப்பட்டாலன்றி மற்றும் கெசட்டில் இத்தகைய வரைவு வெளியிடப்பட்டபின் ஒரு மாதத்திற்குள் பெற்றுக்கொள்ளப்படும், மறுப்புகளையும் கருத்துக்களையும் பரிசீலனை செய்தபின் முடிவு செய்யப்பட்டாலன்றி அத்தகைய எந்த அறிவிப்பும் அமலுக்கு வராது.

(2) இந்தச் சட்டம் மற்றும் அதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட விதிகளின் ஏற்பாடுகளுக்குட்பட்டு துணைப்பிரிவு (1)-ன் கீழான ஒரு திட்டம் கீழ்க்காணும் எல்லா அல்லது ஏதேனும் திட்டத்திற்கு வகை செய்யலாம், அவையாவன:—

(ஏ) சுமட்டுத்தொழிலாளிகளின் நலன்,

(பி) சுமட்டுத்தொழிலாளிகளின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு முறைகள்,

(சி) சுமட்டுத்தொழிலாளிகளின் நலனுக்காக வருங்காலச் சேமிப்பு நிதி உட்பட ஏதேனும் நிதி அல்லது நிதிகள் ஏற்படுத்தல், இத்தகைய நிதியை ஒப்படைத்தல், இத்தகைய நிதிக்கான பங்குத்தொகை செலுத்துதல் மற்றும் அது சம்பந்தப்பட்ட வேறு எல்லாக் காரியங்களும்,

(டி) சுமட்டுத்தொழிலாளிகள் திட்டத்தில் ஆள்தேர்வு மற்றும் நுழைவினை ஒழுங்கு செய்தல், பதிவேடுகளைப் பேணுதல், பதிவேடுகளிலிருந்து தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக பெயர்களை அகற்றுதல் உட்பட சுமட்டுத்தொழிலாளிகள் மற்றும் முதலாளிகளின் பதிவு மற்றும் பதிவுக்கான கட்டணம் விதித்தல்,

(இ) சுமட்டுத்தொழிலாளிகளை வேலையிலமர்த்துவதை ஒழுங்கு செய்தல் மற்றும் பேறுகால பலன், சம்பளத்துடன் விடுப்பு, பணிக்கொடைக்கான ஏற்பாடு உட்பட அத்தகைய வேலைக்கான வரையறைகளும் நிபந்தனைகளும் மற்றும் வாராந்தர மற்றும் பிற விடுமுறைகளும் அதன் சம்பளமும் பற்றிய நிபந்தனைகளும் ஒழுங்கு செய்தல்,

(எப்) எந்த முதலாளி அல்லது கன்டிராக்டர் கீழும் வேலையிலமர்த்தப்படாத சுமட்டுத்தொழிலாளிகளை ஒருங்கிணைத்தல்,

(ஜி) முதலாளிகளும் சுமட்டுத்தொழிலாளிகளும் செலுத்தவேண்டிய பங்குத்தொகையும் அதன் வீதமும் உட்பட இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செலவு கொடுக்கப்பட வேண்டிய முறை மற்றும் கொடுக்கவேண்டிய நபர்,

(எச்) மேற்கூறிய நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டத் திட்டத்தின் நிருவாகத்திற்கும், நிதியின் நிருவாகத்திற்கும் பொறுப்புடைய நபர்களை மற்றும் அதிகாரத் தாபனத்தை நியமித்தல்,

(ஐ) திட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான அல்லது உகந்தவையான ஏதேனும் தற்செயலான மற்றும் தொடர்ந்து ஏற்படுகின்ற காரியங்கள்,

(ஜெ) சுமட்டுத்தொழிலாளிகளின் வேலை நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் சம்பந்தமாகப் பொதுவாக தகுந்த ஏற்பாடுகளுக்கு வகை செய்தல்.

(3) ஏதேனும் சுமட்டுத்தொழிலாளரின் பிரிவுக்கோ அல்லது தொழிலாளிகளுக்கோ ஏதேனும் திட்டம் பொருந்துமா என்பது சம்பந்தமாகப் பிரச்சனை ஏதேனும் எழுந்தால், அக்காரியம் அரசுக்கு அறிவிக்கப்படவேண்டும் என்பதுடன் அதன் மீதான அரசின் முடிவே இறுதி முடிவாக இருக்கும்.

(4) இச்சட்டத்தின் கீழ் சுமட்டுத்தொழிலாளிகள் சம்பந்தமாக திட்டம் ஒன்று உருவாக்கவேண்டுமென அரசு கருதுமிடத்து அரசு, கெசட்டில் விளம்பரம் செய்வதன்மூலம் அத்தகைய சுமட்டுத்தொழிலாளிகள் சம்பந்தமாக அட்டவணை

யில் ஏதேனும் நிறுவனத்தையும் சேர்க்கலாம், அதன் பிற்பாடு அவ்வாறு சேர்க்கப்பட்ட நிறுவனம், இச்சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஒரு நிறுவனமாகக் கருதப்படவேண்டும்.

(5) துணைப்பிரிவு (1)-ன் கீழுள்ள ஒவ்வொரு அறிக்கையும் அவைகள் வெளியிடப்பட்ட உடன்தானே, சட்டமன்றப் பேரவை கூட்டத்தொடரில் இருக்கையில் ஒரே கூட்டத்தொடரிலோ அல்லது தொடர்ந்து வரும் இரு கூட்டத்தொடர்களிலோ மொத்தம் பதினாலு நாட்கள் சட்டமன்றப் பேரவையின் முன் வைக்கப்படவேண்டும் மேலும் இவ்வாறு வைக்கப்படும் கூட்டத்தொடர் முடிவுறுமுன்னர் சட்டமன்றம் அந்த அறிக்கையில் ஏதேனும் மாற்றம் உண்டுபண்ணினாலோ அல்லது அந்த அறிக்கையினை வெளியிடக்கூடாதென்று முடிவுசெய்தாலோ அந்த அறிவிக்கை, அது காரியத்திலாவதுபோல், அதன்பின் அத்தகைய மாற்றங்களுடன் பலனுடையதாக இருக்கும் அல்லது பலனற்றதாக இருக்கும், எனவே, எவ்வாறாயினும் இத்தகைய எந்த மாற்றமும் அல்லது தள்ளுபடியும் அத்தகைய அறிவிக்கையின் கீழ் முன்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தச் செயலின் செல்லுபடியாகும் தன்மைக்கும் குந்தகம் விளைவிக்காதிருக்கவேண்டும்.

அத்தியாயம் V

வாரியம்

14. வாரியம்.—(1) அரசு, கெசட்டில் அறிவிக்கை செய்து இந்தச் சட்டத்தின் மற்றும் திட்டத்தின் கீழ் வாரியத்தின் அதிகாரங்களை பிரயோகிக்கவும் அலுவல்களைப்புரியவும் அறிவிக்கையில் குறிப்பிடப்படும் அத்தகைய பெயரில் அறியப்படும் ஒரு வாரியத்தினை நிறுவலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு வாரியமும் குறிப்பிடப்படும் பெயருடைய ஒருங்கிணைந்த குழுவாக, நிரந்தர வாரிசுரிமையுடனும் பொது முத்திரை கொண்டுள்ளதாகவும் இருக்கும். மேலும் சொத்துக்களை கைப்பற்றும் உரிமையும் விற்றுவிடும் உரிமையினையும் ஒப்பந்தம் செய்து கொள்ளும் உரிமையும் அதனது பெயரில் வழக்குத் தொடரவும், தொடரப்படவும் உள்ள உரிமைகளையும் பெற்றிருக்கும்.

(3) வாரியத்தில், அதது காலங்களில் அரசு, முதலாளிகளையும், சுமட்டுத் தொழிலாளிகளையும் அரசின் பிரதிநிதிகரித்து பெயர் நியமனம் செய்யும் உறுப்பினர்கள் அடங்கியிருப்பார்.

(4) முதலாளிகளையும் சுமட்டுத்தொழிலாளிகளையும் அரசினையும் பிரதிநிதிகரிக்கும் உறுப்பினர்களது எண்ணிக்கை சரிசமமாக இருக்கவேண்டும்.

(5) அரசு, வாரியத்தில் உறுப்பினர்களில் ஒருவரை அதன் தலைவராக நியமிக்கவேண்டும்.

(6) வாரியத்திற்கான எல்லா உறுப்பினர்களையும் பெயர் நியமனம் செய்து அதன் தலைவரையும் நியமித்த பிறகு, அவர்களது பெயர்களை அரசு கெசட்டில் விளம்பரம் செய்யவேண்டும்.

(7) வாரியத்தின் உறுப்பினர்களது பதவிக்காலம் குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய காலத்திற்கு இருக்கும்.

(8) வாரியம், இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது இச்சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்ட விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய அதிகாரங்களை பிரயோகிக்கவோ, மற்றும் அத்தகைய அலுவல்களை நிறைவேற்றவோ மற்றும் அத்தகைய நடைமுறைகளை பின்பற்றவோ செய்யவேண்டும்.

(9) அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தும் அலுவல்களை நிறைவேற்றும்போதும் வாரியம் அந்த காலங்களில் அரசு குறிப்பிடும் அறிவுரைகளைப் பின்பற்றி செயல்படவேண்டும்.

15. தகுதியின்மைகளும் அகற்றலும்.—(1) ஏதேனும் நபர்,

(எ) வாரியத்தின சம்பளம் பெறும் அலுவலராக இருந்தால், அல்லது

(பி) ஒரு கடனாளியாக தீர்ப்பளிக்கப்பட்டிருக்கிறதாயின் அல்லது எச்சமயத்திலும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளராயின், அல்லது

(சி) சித்த சுவாதீனமற்றவராகக் கண்டுபிடிக்கப்பட்டால் அல்லது மனநிலையற்றவராகிவிட்டால், அல்லது

(டி) கெட்ட நடவடிக்கை சம்பந்தப்பட்ட ஏதேனும் குற்றத்திற்கு தண்டிக்கப்பட்டிருப்பாராயின்,

(இ) அதது காரியத்திலாவதுபோன்று முதலாளிகளை அல்லது சுமட்டுத் தொழிலாளிகளை பிரதிநிதிகரிப்பதிலிருந்து நின்றுவிட்டால்,

அவர் வாரியத்தின் ஒரு உறுப்பினராக பெயர் நியமனம் செய்யப்படவோ தொடர்ந்திருக்கவோ கூடாது.

(2) ஏதேனும் உறுப்பினர்,—

(எ) துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் தகுதியின்மைகளுக்கு உட்பட்டால் அல்லது உட்பட்டிருப்பதாயின், அல்லது

(பி) வாரியத்தின் தொடர்ந்துள்ள மூன்று கூட்டங்களுக்கு மிகுதியாக அனுமதியின்றி ஆஜராகாமலிருந்தால்,—

அவரை பதவியிலிருந்து அரசு அகற்றலாம்.

16. வாரியத்திற்கு உதவும் பொருட்டு அதிகாரிகளை நியமனம் செய்தல்.—(1) இச்சட்டத்தின் மற்றும் திட்டங்களின் கீழ் வாரியம் அதனது அதிகாரங்களைப் பயன்படுத்தவும் அலுவல்களை நிறைவேற்றவும் உதவும் பொருட்டு அரசு தேவையெனக்கருதும் எண்ணிக்கையின் அதிகாரிகளை நியமனம் செய்யலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட அதிகாரிகள் குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய அதிகாரங்களைப் பயன்படுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் வேண்டும்.

17. வாரியத்தினைக்கலைத்தல்.—(1) அரசு,—

(எ) வாரியம் அதன் அலுவல்களைப்புரிய இயலாமலாகியுள்ளது, அல்லது

(பி) வாரியம் அதன் அலுவல்களைப்புரிவதில் தொடர்ந்து தவறிழைந்துள்ளது அல்லது அதன் அதிகாரங்களை மீறியுள்ளது அல்லது துர்விநியோகம் செய்துள்ளது என்று கருதினால் கெசற்று அறிவிக்கை வாயிலாக அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட காலத்திற்கு வாரியத்தினை கலைக்கலாம்:

எனினும் உட்பிரிவு (பி)-ல் குறிப்பிடப்பட்ட ஏதேனும் காரணத்தால் அந்த துணைப்பிரிவின் கீழ் அறிவிக்கை வெளியிடுவதற்கு முன்னர் வாரியத்திற்கு அது ஏன் கலைக்கப்படக்கூடாது என்று காரணம் காட்டுமாறு ஒரு நியாயமான தருணம் நல்கி வாரியத்தின் விளக்கம் மற்றும் மறுப்புகளை பரிசீலிக்கவேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் அறிவிக்கை பிரசுரிக்கப்படும் போது:—

(எ) வாரியத்தில் எல்லா உறுப்பினர்களும், கலைக்கப்பட்ட தேதி முதல் அத்தகைய உறுப்பினர் பதவியிலிருந்துக் காலியானவர்களாகக் கருதப்படுவர்.

(பி) வாரியம் கலைக்கப்பட்டிருக்கும் காலத்தில், அதனது எல்லா அதிகாரங்களையும், கடமைகளையும் அறிவிக்கையில் குறிப்பிடப்படும் அத்தகைய நபரால் அல்லது நபர்களால் பயன்படுத்தப்படவும் நிறைவேற்றப்படவும் வேண்டும், மற்றும்

(சி) வாரியத்தின் எல்லா நிதிகளும், சொத்துக்களும், வாரியம் கலைக்கப்பட்டிருக்கும் காலத்தில், அரசைச் சார்ந்தவையாகவிருக்கும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிடப்பட்ட கலைப்பு கால அளவு முடிவுற்றதும் அரசு,—

(ஏ) அது தகுந்ததெனக் கருதும் மேலுமுள்ள கால அளவுக்கு கலைப்பு கால அளவினை நீடிக்கலாம்:

எனினும் கலைப்பு கால அளவு ஒரு வருடத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும்; அல்லது

(பி) பிரிவு 14-ல் வகை செய்யப்பட்டவாறு வாரியத்தினை புனரமைக்கலாம்.

அத்தியாயம் VI

கமிட்டிகள்

18. கமிட்டிகள்.—(1) அரசு, கெசற்று விளம்பரம் மூலம் இந்தச் சட்டத்தின் மற்றும் திட்டத்தின் கீழ் அந்த பகுதி சம்பந்தமாக கமிட்டியின் அதிகாரங்களைப் பிரயோகிக்கவும் அலுவல்களைப்புரியவும் அறிவிக்கையில் குறிப்பிடப்படக்கூடிய அத்தகைய பகுதி மற்றும் அத்தகைய பெயரில் ஒரு கமிட்டியை நியமிக்கலாம்.

(2) அத்தகைய ஒவ்வொரு கமிட்டியும் ஒரு ஒருமித்த குழுவாக குறிப்பிடப்பட்ட ஒரே பெயரிலும் நிலையான வழியுரிமையும் ஒரு பொது முத்திரையும் உடையதாக இருக்கும் மேலும் சொத்தினை சேகரிக்கக், கைக்கொள்ள மற்றும் முடிவு செய்யவும் ஒப்பந்தம் செய்யவுமுள்ள அதிகாரத்துடனும் அதே பெயரில் வழக்கிடவும் வழக்கு தொடரப்படவும் செய்யவேண்டும்.

(3) கமிட்டியில் அரசு பெயர் நியமனம் செய்த பதினைந்திற்கு மிகாத உறுப்பினர்கள் இருப்பார். அவர்களில் மூன்றில் இரண்டு பாகம் முதலாளிகள் மற்றும் சுமட்டுத் தொழிலாளிகளை பிரதிநிதிகரித்து இருக்கவேண்டும்.

(4) முதலாளிகள் மற்றும் சுமட்டுத்தொழிலாளிகளை பிரதிநிதிகரிக்கும் உறுப்பினர்கள் எண்ணிக்கையில் சமமாக இருக்கவேண்டும்.

(5) அரசு கமிட்டியின் ஒரு உறுப்பினரை அதன் செயர்மானாகவும் பிறிதொரு உறுப்பினரை அதன் கன்வினராகவும் நியமிக்கவேண்டும்.

(6) கமிட்டியின் எல்லா உறுப்பினர்களை பெயர் நியமனம் செய்த பின்னரும் செயர்மான் மற்றும் கன்வினரை நியமனம் செய்த பின்னரும் அரசு அவர்களது பெயர்களை கெசட்டிலும் அரசு தகுந்ததெனக்கருதும் பிற இடங்களிலும் பிரசுரிக்கவேண்டும்.

(7) கமிட்டி உறுப்பினர்களின் பதவிக்காலம் குறிப்பிடப்பட்ட விதத்திலிருக்கும்.

(8) கமிட்டியின் கடமைகள்—

(எ) எந்த முதலாளி அல்லது கண்டிராக்டர் கீழும் வேலையிலமர்த்தப் படாத சுமட்டுத்தொழிலாளிகளை ஒருங்கிணைத்தல்,

(பி) சுமட்டுத்தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்தி ஒழுங்கு செய்தல் மற்றும் அவர்களுக்கு கூலி வழங்குதல்,

(சி) தேவையானபோது அவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளல்,

(டி) இந்தச்சட்டம் மற்றும் திட்டத்தினை நிறைவேற்றத் தேவையான எல்லா செயல்களும் செய்தல்.

19. கமிட்டிக்கு உதவ அலுவலர்களை நியமித்தல்.—(1) இந்தச் சட்டத்தின் மற்றும் திட்டத்தின் கீழ் கமிட்டிக்கு அதன் அதிகாரங்களைப் பிரயோகிக்கவும் அதன் அலுவல்களைப்புரியவும் அதற்கு உதவிபுரிய தகுந்-தெனக்கருதும் அத்தகைய எண்ணிக்கையிலான அலுவலர்களை அரசு நியமிக்கலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் நியமிக்கப்பட்ட அலுவலர்கள் குறிப்பிடப் பட்ட அத்தகைய அதிகாரங்களைப் பிரயோகிக்கவும் அலுவல்களைப்புரியவும் வேண்டும்.

20. கமிட்டிகளைக் கலைத்தல்.—(1) அரசு—

(எ) கமிட்டிக்கு அதன் அலுவல்களைப்புரிய இயலாமலாகியுள்ளது என்று, அல்லது

(பி) அதன் அலுவல்களைப்புரிவதில் கமிட்டி தொடர்ந்து தவறு செய்துள்ளது என்று அல்லது அதன் அதிகாரங்களை மீறியுள்ளது அல்லது துர்விநி யோகம் செய்துள்ளது என்று, அரசு கருதினால் கெசற்று விளம்பரம் மூலம் விளம்பரத்தில் குறிப்பிடும் கால அளவிற்கு கமிட்டியை கலைக்கலாம்;

எனினும் உட்பிரிவு (பி)-யில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் காரணங்களால் இந்த துணைப்பிரிவின் கீழ் விளம்பரம் வெளியிடுவதற்கு முன்னால் கமிட்டிக்கு அதனை ஏன் கலைக்கக்கூடாது என்று காரணம் காட்டுவதற்கு நியாயமான தருணம் நல்கி கமிட்டியின் விளக்கம் மற்றும் மறுப்புகளைப் பரிசீலனை செய்யவேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் விளம்பரம் வெளியிடும்போது—

(எ) கமிட்டியின் எல்லா உறுப்பினர்களும் அத்தகைய வெளியீட்டு தேதிமுதல் உறுப்பினர் பதவியை காலிசெய்யவேண்டும்.

(பி) கமிட்டி பிரயோகித்துள்ள அல்லது புரிந்துள்ள எல்லா அதிகா ரங்களும், அலுவல்களும், கலைப்பு கால அளவில், விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட அத்தகைய நபர் அல்லது நபர்களால் பிரயோகிக்கப்படவும் புரியப்படவும் வேண்டும்.

(சி) கமிட்டியைச் சார்ந்த எல்லா நிதிகளும் பிற சொத்துக்களும், அரசினை சார்ந்துவிடும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப் பிடப்பட்ட கலைப்பு கால அளவு முடிந்ததும், அரசு—

(எ) அரசு தேவையெனக் கருதும் மேலுமுள்ள கால அளவிற்கு கலைப் புக்கான அளவினை நீடிக்கலாம்:

எனினும் மொத்தக்கலைப்புக்கால அளவு ஒரு வருடத்திற்கு மிகுதியாகக் கூடாது.

(பி) பிரிவு 18-ல் குறிப்பிடப்பட்ட விதத்தில் பிறிதொரு கமிட்டியை யமிக்கலாம்.

அத்தியாயம் VII

தகராறுகள்

21. தகராறுகளைத் தீர்த்தல்.—(1) ஏதேனும் சுமட்டுத்தொழிலாளியின் வேலை சம்பந்தமாக அல்லது வேலையின்மை சம்பந்தமாக அல்லது வேலை வரையறை சம்பந்தமாக அல்லது வேலை நிலைமை சம்பந்தமாக ஏதேனும் தகராறு ஏற்பட்டிருப்பின் அல்லது ஏற்பட இருப்பின், நியாயாதிக்கமுள்ள உதவி தொழிலாளர் நல அதிகாரி, அத்தகைய தகராறினை தீர்க்கும் பொருட்டு இசைவிணக்கக் கூட்டம் நடத்தலாம். மேலும் ஒத்த தீர்ப்பு ஏற்படவில்லையாயின் தகராறு பற்றி இசைவிணக்க அதிகாரிக்கு ஒரு அறிக்கை அனுப்பலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் கீழ் ஒரு அறிக்கை கிடைத்ததும் இசைவிணக்க அதிகாரி இசைவிணக்க நடவடிக்கைகள் நடத்தலாம் மேலும் தகராறினை நீக்கும் பொருட்டு தாமதமின்றி, அது பற்றியும் அதன் நன்மைகள் மற்றும் அதன் நேரான தீர்ப்பினை பாதிக்கின்ற எல்லா காரியங்கள் பற்றியும் விசாரணை நடத்தவேண்டும். மேலும் தகராறினை நல்லவிதத்திலும் சுமுகமாகவும் தீர்ப்பதற்குத் தகுந்ததெனக் கருதும் எல்லா காரியங்களும் செய்யலாம்.

(3) இசைவிணக்க நடவடிக்கை நடைபெறும்போது தகராறு தீர்ப்புக்கு வந்தாலோ அல்லது தகராறின் ஏதேனும் காரியங்கள் தீர்வுக்கு வந்தாலோ இசைவிணக்க அதிகாரி அது சம்பந்தமான ஒரு அறிக்கையினை மேல்முறையீட்டு அதிகாரிக்கு அனுப்பவேண்டும்.

(4) தகராறு தீர்ப்பு செய்யப்படாவிடின் அல்லது தகராறின் ஏதேனும் காரியங்கள் தீர்வு செய்யப்படாவிடின், இசைவிணக்க அதிகாரி தகராறின் மீது அல்லது எந்தக் காரியங்கள் சம்பந்தமாக தீர்வுக்கு வர இயலவில்லையோ அதன் மீது அவரது தீர்மானத்தினை எடுக்கவேண்டும் மற்றும் தகராறின் ஒரு அறிக்கையினையும் அவரது தீர்மானத்தினையும் ஒரு நகலினையும் மேல்முறையீட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(5) துணைப்பிரிவு (4)-ன் கீழுள்ள இசைவிணக்க அதிகாரியின் தீர்மானம் துணைப்பிரிவு (7)-ன் கீழ் மேல்முறையீட்டு அதிகாரியின தீர்மானத்துக்குட்பட்டு தகராறு சம்பந்தமான அனைவரையும் கட்டுப்படுத்துவதாகும்.

(6) துணைப்பிரிவு (4)-ன் கீழ் இசைவிணக்க அதிகாரியின் தீர்மானத்தினால் பாதிக்கப்பட்ட ஏதேனும் நபர் குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய காலத்திற்குள், அத்தகைய தீர்மானத்திற்கு எதிராக மேல்முறையீட்டு அதிகாரியிடம் மேல்முறையீடு செய்யலாம்,

(7) துணைப்பிரிவு (6)-ன் கீழ் மேல்முறையீடு கிடைத்தவுடன், மேல்முறையீட்டு அதிகாரிக்குழு அது தேவையெனக்கருதும் அத்தகைய விசாரணைகள் நடத்தி, கட்சிகளுக்கு அவர்களை விசாரிக்கத் தருணம் நல்கியபின்னர் மேல்முறையீடு கிடைத்த இரு வாரங்களுக்குள் அது சம்பந்தமாகத் தீர்மானம் எடுக்க வேண்டும்.

(8) நிலவிலிருக்கும் ஏதேனும் சட்டங்களில் அடங்கியிருப்பது எவ்வாறாயினும், எழுதிக்குறிப்பிட்டுவைக்கவேண்டிய சரியான மற்றும் போதுமான காரணங்கள் தவிரவல்லாமல், மேல்முறையீட்டின் மீது ஒரு தீர்மானம் எடுப்பதனை நிறுத்தி வைத்துவிட்டு இசைவிணக்க அதிகாரியின் தீர்மானம் செயல்படுத்தப்படுவதனை மேல்முறையீட்டு அதிகாரக்குழு தடை செய்யக்கூடாது.

22. *அரசு தகராறுகளின் மீது தீர்மானம் எடுத்தல் அல்லது குறிப்பீடு செய்தல்.*—(1) பிரிவு 21-ல் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும், ஏதேனும் தகராறுகள் ஏற்பட்டிருப்பின் அல்லது ஏற்படவிருப்பின் அரசு, காரணங்கள் குறிப்பிடப்பட்டுள்ள எழுத்து வடிவிலான ஆணை வாயிலாக,

(எ) தகராறு ஏற்பட்டிருக்கும் அல்லது ஏற்படவிருக்கும் பகுதிக்கென அமைக்கப்பட்ட மேல்முறையீட்டு அதிகாரக்குழுவிடம் தீர்மானத்திற்கு அனுப்பலாம், அல்லது

(பி) அரசே தகராறினைத் தீர்வு செய்யலாம்.

(2) துணைப்பிரிவு (1)-ன் உட்பிரிவு (எ)-ன் கீழ் மேல்முறையீட்டு அதிகாரக்குழுவிடம் அரசு ஒரு தகராறினை குறிப்பீடு செய்திருப்பின் அதிகாரக் குழு, அத்தகைய குறிப்பீட்டினை பிரிவு 21-ன் துணைப்பிரிவு (6)-ன் கீழ் அரசின் ஒரு மேல்முறையீடு எனுமாறு தீர்வு செய்யவேண்டும்.

(3) துணைப்பிரிவு (1)-ன் உட்பிரிவு (பி)-ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசு எடுக்கும் தீர்மானமானது இறுதியானதாகும் மற்றும் உடனடியாக தகராறு சம்பந்தமானவர்கள் அரசின் தீர்மானத்திற்குக் கட்டுப்படவும் வேண்டும்.

23. *கட்சிகளைப் பிரதிநிதிகரித்தல்.*—(1) ஒரு தகராறில் ஒரு கட்சியாக இருக்கின்ற ஒரு சுமட்டுத்தொழிலாளி, இந்தச் சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கையில்—

(எ) அவர் உறுப்பினராக இருக்கின்ற ஒரு பதிவு செய்யப்பட்ட தொழிற் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் அல்லது பிற நிர்வாகியால்,

(பி) உட்பிரிவு (எ)-யில் குறிப்பிடப்பட்ட தொழிற் சங்கம் இணைக்கப்பட்டுள்ள தொழிற் சங்கங்களின் இணைப்பின் ஏதேனும் நிர்வாக உறுப்பினர் அல்லது பிற நிர்வாகியால்,

(சி) சுமட்டுத்தொழிலாளி ஏதேனும் தொழிற் சங்கத்தில் உறுப்பினர் அல்லாவிடில் சுமட்டுத்தொழிலாளி வேலையிலமர்த்தப்பட்டுள்ள மற்றும் குறிப்பிடப்பட்ட விதத்தில் அதிகாரப்படுத்தப்பட்ட நிறுவனத்தில் தொடர்புள்ள தொழிற் சங்கத்தின் நிர்வாக உறுப்பினர் அல்லது பிற நிர்வாகியால் அல்லது அதனில் வேலை பார்க்கின்ற ஏதேனும் பிற சுமட்டுத் தொழிலாளியால்—பிரதிநிதிகரிக்க உரிமையுடையவராவார்.

(2) ஒரு தகராறில் ஒரு கட்சியாக இருக்கின்ற ஒரு முதலாளி, இந்த சட்டத்தின் கீழ் ஏதேனும் நடவடிக்கையில்,—

(எ) அவர் உறுப்பினராக இருக்கின்ற முதலாளிகள், சங்கத்தின் ஒரு அலுவலரால்,

(பி) உட்பிரிவு (7)-ல் குறிப்பிடப்பட்ட சங்கம் இணைக்கப்பட்டுள்ள முதலாளிகள் சங்கத்தின் இணைப்பின் ஒரு அலுவலரால்,

(சி) முதலாளி, ஒரு முதலாளிகள் சங்கத்தில் உறுப்பினர் அல்லாவிடில் முதலாளி ஈடுபட்டுள்ள அல்லது குறிப்பிடப்பட்ட விதத்தில் அதிகாரப்படுத்தப்பட்ட நிறுவனம் போன்ற நிறுவனத்தில் தொடர்புள்ள முதலாளிகள் சங்கத்தின் ஒரு அலுவலரால் அல்லது அதனில் ஈடுபட்டுள்ள ஏனைய பிற முதலாளியால்—பிரதிநிதிகரிக்கப்பட உரியவராவார்.

(3) இந்தச்சட்டத்தின் கீழ் ஒரு தகராறில் கட்சியாக உள்ளவர், ஏதேனும் இசைவிணக்க நடவடிக்கையில் சட்ட வழக்குரைஞர் ஒருவரால் பிரதிநிதிகரிக்க உரியவரல்லர்.

(4) மேல்முறையீட்டு அதிகாரக்குழு அல்லது அரசின் முன் உள்ள ஏதேனும் நடவடிக்கையில் ஒரு தகராறில் கட்சியாக உள்ளவர், அதது காரியத்திலாவதுபோன்று நடவடிக்கையில் பிற கட்சிக்காரர்களின் ஒப்புதலுடன் மற்றும் மேல்முறையீட்டு அதிகாரி அல்லது அரசின் அனுமதியுடன் ஒரு சட்ட வழக்குரைஞரால் பிரதிநிதிகரிக்கப்படலாம்.

அத்தியாயம் VIII

தொழிலாளர்களின் நஷ்டஈடு

24. தொழிலாளர் நஷ்டஈட்டுச்சட்டம் சுமட்டுத்தொழிலாளர்களுக்குப் பொருந்தச்செய்தல்.—1923-ன் தொழிலாளர் நஷ்ட ஈட்டுச்சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1923-ன் 8) ஏற்பாடுகளும், அதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட விதிகளும், தேவையான மாற்றங்களுடன் ஏதேனும் நிறுவனத்தில் வேலை செய்யும், சுமட்டுத்தொழிலாளர்களுக்குப் பொருந்தும் மற்றும் இந்நோக்கத்திற்காக, அவர்கள் அச்சட்டத்தின் கீழ் வரும் பொருளுக்குட்பட்டு தொழிலாளர்களாகக் கருதப்படவேண்டும்.

அத்தியாயம் IX

பதிவேடுகளும் ஆவணங்களும்

25. சுமட்டுத்தொழிலாளர்களது பதிவேடு.—(1) குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய அதிகாரக்குழு அல்லது அதிகாரி, அதனது அல்லது அவரது நியாயாதிக்க எல்லைக்குள் வசிப்பவர்களான சுமட்டுத்தொழிலாளிகளுக்கென ஒரு பதிவேடு தயார் செய்யவேண்டும்.

(2) பதிவேடு குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய விவரங்கள் அடங்கியதாக இருத்தல் வேண்டும்.

(3) குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய விதத்தில், அதது காரியத்திலாவது போல் அதிகாரக்குழு அல்லது அதிகாரி பதிவேட்டினைப் பேண வேண்டும்.

26. பதிவேடுகளையும் ஆவணங்களையும் முதலாளிகள் பேணுதல்.—(1) குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய பதிவேடுகளையும் ஆவணங்களையும் ஒவ்வொரு முதலாளியும் பேணல் வேண்டும்.

(2) துணைப்பிரிவு (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ள பதிவேடுகளும் ஆவணங்களும் குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய விவரங்கள் அடங்கியவையாயும், அத்தகைய அதிகாரியால் மேல் ஒப்பமிடப்பட்டதாகவும் அத்தகைய இடத்தில் வைக்கப்பட்டும் இருக்கவேண்டும்.

அத்தியாயம் X

தண்டங்கள் மற்றும் நடைமுறை

27. தடை செய்பவர்களுக்கான தண்டனை.—(1) இச்சட்டத்தின் கீழுள்ள தனது கடமை செய்ய முற்படும் ஏதேனும் ஆய்வாளரின் அல்லது உதவி தொழிலாளர்நல அதிகாரியை அல்லது இசைவிணக்க அதிகாரியை அல்லது மேல்முறையீட்டதிகாரக்குழுவினை கடமை செய்யவிடாது தடை செய்வதாயின் அல்லது இச்சட்டத்தால் அல்லது சட்டத்தின் கீழ் அதிகாரப்படுத்தப்பட்ட ஏதேனும் ஆய்வு நடத்த, சோதனை செய்ய அல்லது விசாரணை செய்ய வரும் ஆய்வாள

ருக்கு வேண்டிய வசதி செய்து கொடுக்க மறுக்கும் அல்லது மனபூர்வமாக செய்யத்தவறும் நபர் எவராயினும் ஆறுமாதம் வரையிலான சிறைத்தண்டனையுடனே அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதத்துடனே அல்லது இரண்டும் சேர்ந்தோ தண்டிக்கப்பட உரியவராவார்.

(2) இச்சட்டத்திற்கிணங்க பேணப்பட்டிருக்கும் ஏதேனும் பதிவேட்டினை அல்லது பிற ஆவணத்தினை ஆய்வாளர் அல்லது இசைவிணக்க அதிகாரி அல்லது மேல்முறையீட்டு அதிகாரக்குழு தேவைப்பட்டு, மனப்பூர்வமாக அதனைக் கொடுக்காமலிருப்பவர் எவராயினும் அல்லது இச்சட்டத்தின் கீழ் ஒரு ஆய்வாளர் அல்லது இசைவிணக்க அதிகாரி அல்லது மேல்முறையீட்டுக்குழு அவருடைய அல்லது அதனது கடமையினைச் செய்யும் முகமாக செயல்படும் போது அவர் முன் ஆசராகும் ஒருவரை அல்லது விசாரணை செய்யப்பட வேண்டியவரைத் தடை செய்தாலோ, தடை செய்ய முயற்சி செய்தாலோ அல்லது தடை செய்யும் வகையிலான ஏதேனும் காரியங்களை அறிந்து செய்தாலோ அத்தகைய நபர் ஆறுமாதம் வரையிலான சிறைத்தண்டனையுடன் அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதத்துடன் அல்லது இருவகையிலுமாகவோ தண்டனைக்குரியவராவார்.

28. பொய்யான அறிக்கைகள் முதலியன அளிப்பதற்குள்ள தண்டனை.—ஒருவர் இச்சட்டத்தின் கீழ் அல்லது ஒரு திட்டத்தின் கீழ் அவர் செலுத்த வேண்டிய தொகையினைத் தவிர்க்கும் பொருட்டு அல்லது அத்தகைய தொகை எதனையேனும் பிறர் கொடுக்காமலிருக்கும் பொருட்டு, தெரிந்து பொய்யான ஒரு அறிக்கையினை அல்லது பொய்யான முறையீட்டினைக் கொடுத்தால் அல்லது கொடுக்கக் காரணமாக இருந்தால் அவர் ஆறு மாதம் வரையிலான சிறைத்தண்டனையுடன் அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதத்துடன் அல்லது இரண்டும் சேர்த்துத் தண்டிக்கப்பட உரியவராவார்.

29. பிற தண்டனைகள்.—இச்சட்டத்தின் அல்லது ஒரு திட்டத்தின் அல்லது இதன் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் விதிகளின்* ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயல்படுபவர் அல்லது தவறு செய்பவர் எவராயிருப்பினும், அத்தகைய முரணான செயலுக்கு அல்லது கீழ்ப்படியாமைக்கும் பிற தண்டனைகள் எதுவும் இச்சட்டத்தின் கீழ் வகை செய்யப்படாமலிருப்பின் ஆறுமாதம் வரையிலான சிறைத் தண்டனையுடன் அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதத்துடன் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படவேண்டும். மற்றும் அத்தகைய முரணானபோக்கு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தால் முதலில் குற்றம் சாட்டப்பட்டு தண்டிக்கப்பட்ட நாளுக்குப்பிறகு அவ்வாறு தொடர்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொரு நாளுக்கும் நூறு ரூபாய் வீதம் கூடுதல் தண்டனை விதிக்கப்படவேண்டும்.

30. முதலில் குற்றவாளி எனத்தீர்ப்புக் கூறப்பட்டதன் பிற்பாடுள்ளதற்கு மிகைப்பட்ட தண்டனை.—இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாமெனும் ஒரு குற்றத்தினைச் செய்து அதற்காகத் தண்டிக்கப்பட்ட ஒருவர் மீண்டும் அதே ஏற்பாடினை மீறி குற்றவாளியாக மாறினால் இரண்டாவது குற்றத்தின் போது அவருக்கு ஒரு வருடம் வரையிலான சிறைத்தண்டனையுடன் அல்லது இரண்டாயிரம் ரூபாய் வரையிலான அபராதத்துடன் அல்லது இரு வகையிலும் சேர்த்து அவரைத்தண்டிக்கவேண்டும்.

31. கம்பெனிகள் செய்யும் குற்றங்கள்.—(1) இச்சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்தினை ஒரு கம்பெனி செய்திருப்பின், அந்தக் குற்றம் செய்யப்பட்டபோது கம்பெனியின் பொறுப்பாளர்களாக இருந்த ஒவ்வொருவரும் மற்றும் கம்பெனி

யின் அலுவல் நடைப்புக்குப் பொறுப்புடைய ஒவ்வொருவரும் அத்துடன் கம்பெனியும் அந்தக் குற்றத்திற்குக் காரணமானவராகக் கருதப்படவும், அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கப்படவும், முறைப்படி தண்டிக்கப்படவும், வேண்டும்:

எனினும், இத்துணைப்பிரிவில் அடங்கியுள்ள எதுவும், அத்தகைய ஏதேனும் நபர், அவரது அறிவுக்குத் தெரியாமல் அந்தக் குற்றம் செய்யப்பட்டது அல்லது அத்தகைய குற்றம் நடைபெறுமலிருக்க அவர், அவரால் இயன்றவரை முயற்சி செய்தார் என்று நிரூபிப்பதாயின் அல்லது இத்துணைப்பிரிவின் கீழ் தண்டனைக்குட்படுத்தக் கூடாது.

(2) துணைப்பிரிவு (1)-ல் அடங்கியுள்ள எதுவும் எவ்வாறிருப்பினும் இச்சட்டத்தின்கீழுள்ள ஒரு குற்றம் கம்பெனியின் ஏதேனும் இயக்குநர், மானேஜர், செயலாளர் அல்லது பிற அதிகாரியின் சம்மதத்துடன், அல்லது உடந்தையுடன் அல்லது அவர்களது கவனக்குறைவின் காரணத்தால் ஏற்பட்டிருப்பின், அத்தகைய குற்றத்திற்கு அத்தகைய இயக்குநரை அல்லது மானேஜரை அல்லது செயலாளரை அல்லது பிற அதிகாரியினைக் காரணமாகக் கருத வேண்டும். மற்றும் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுத்து உரியமுறையில் தண்டிக்கவேண்டும்.

விளக்கம்.—இப்பிரிவின் நோக்கங்களின் பொருட்டு—

(ஏ) "கம்பெனி" எனில் ஏதேனும், ஒருங்கிணைந்த குழு என்பதுடன் ஒரு நிறுவனம் அல்லது பிற நபர்களது சங்கமும் உட்படும், மற்றும்

(பி) ஒரு நிறுவனம் சம்பந்தமாக "இயக்குநர்" எனில் அந்த நிறுவனத்தின் பங்குதாரராகும்.

32. <u>குற்றத்தினை வழக்கிற்கெடுத்தல்.</u>—இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாமெனும் எந்தக் குற்றத்தினையும், அரசின் அல்லது அரசால் இதன்பொருட்டு அதிகாரப்படுத்தப்பட்ட ஒரு அதிகாரியின் எழுத்து மூலமான முன் அனுமதி பெற்று புகார் கொடுத்தாலன்றி ஒரு நீதிமன்றமும் வழக்கிற்கெடுக்கக்கூடாது. மற்றும் முதல் வகுப்பு ஜுடீஷியல் மஜிஸ்டிரேட் தரத்திற் குறைந்த ஒரு நீதிமன்றத்தால் இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாமெனும் ஒரு குற்றத்தினை விசாரணை செய்யக்கூடாது.

33. <u>வழக்கு நடவடிக்கையின் காலவரையறை.</u>—இச்சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படலாமெனும் எந்தக் குற்றத்தினையும் ஒரு நீதிமன்றமும், அத்தகைய குற்றம் நடைபெற்றுள்ளது என அரசிற்கு அல்லது பிரிவு 32-ன் கீழ் அதிகாரப்படுத்தப்பட்ட அதிகாரியின் அறிவிற்குத் தெரியவரும் நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் இது சம்பந்தமான புகார் கொடுத்தாலன்றி வழக்கிற்கெடுத்துக் கொள்ளக்கூடாது.

அத்தியாயம் XI

பலவகை

34. <u>உரிமையியல் வழக்கு நீதிமன்றத்தின் நியாயதிக்க அதிகாரத்தின் மீதான தடை.</u>—இச்சட்டத்தின் கீழுள்ள ஏதேனும் அதிகாரியின் அல்லது அதிகாரக்குழுவின் வரம்பிற்குட்பட்ட ஏதேனும் காரியங்கள் சம்பந்தமாக அவர் அல்லது அது மேற்கொண்ட தீர்மானத்தினை அல்லது ஆணையினை இல்லாதாக்க அல்லது திருத்தம் செய்ய வேண்டிய ஒரு வழக்கினையும் அல்லது சட்ட நடவடிக்கையினையும் எந்த நீதிமன்றமும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

G. 3147/V.

35. உறுதிமொழியின் மீது சான்றெடுத்தல்.—இச்சட்டத்தின் கீழுள்ள அதிகாரங்களைப் பிரயோகிக்கும் ஏதேனும் அதிகாரக்குழு அல்லது அதிகாரி பின்வரும் காரியங்கள் சம்பந்தமாக, ஏதேனும் வழக்கினை விசாரணை செய்யும் போது 1908-ன் உரிமையியல் நடைமுறை விதித்தொகுப்பு (மத்தியச்சட்டம் 1908-ன் 5) அனுசரித்து ஒரு உரிமையியல் நீதிமன்றத்திற்குரிய அத்தனை அதிகாரங்களும் உடையதாய் இருக்கும், அவையாவன:—

(எ) ஏதேனும் நபரின் வருகையினை கட்டாயப்படுத்துவதும் அவரை உறுதிமொழியின் மீது விசாரணை செய்தலும்,

(பி) ஆவணங்களைக்கண்டுபிடிக்கவும் சமர்ப்பிக்கவும் கோருதல்,

(சி) ஆணை உறுதிப்பத்திரத்தின் மீது சான்று எடுத்தல்,

(டி) சாட்சிகளை விசாரணை செய்ய கமிஷன்கள் ஏற்படுத்துதல்,

(இ) குறிப்பிடப்படலாமெனும் அத்தகைய பிற காரியங்கள், மற்றும் அத்தகைய அதிகாரக்குழுவின் அல்லது அதிகாரியின் முன்னிலையில் நடைபெறும் நடவடிக்கைகளை இந்திய குற்றவியல் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1860-ன் 45) பிரிவு 196-ன் நோக்கத்தின் பொருட்டு பிரிவுகள் 193 மற்றும் 228-ன் பொருளுக்குட்பட்டும் நீதிமன்ற நடவடிக்கைகளாகக் கருதப்படவேண்டும்.

36. முதலாளியிடமிருந்து கிடைக்கவேண்டிய பணத்தை ஈடாக்கல்.—(1) பிரிவு 21-ன் துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4) அல்லது துணைப்பிரிவு (7)-ன் கீழ் அல்லது பிரிவு 22-ன் கீழ் ஏற்பட்ட ஒரு இணக்கத்தின் அல்லது தீர்மானத்தின் கீழ் ஒரு கமட்டுத்தொழிலாளிக்கு ஏதேனும் பணம் கிடைக்கவேண்டியிருப்பின் கமட்டுத்தொழிலாளியோ அல்லது அவர் பொருட்டு அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட பிற ஏதேனும் நபரோ அல்லது அந்த கமட்டுத்தொழிலாளி இறந்திருப்பின் அவரது ஒப்படை பெற்றவர்களோ அல்லது வாரிசுகளோ பிற ஏதேனும் பணம் ஈடாக்கும் முறைக்குக் குந்தகமின்றி, மேல்முறையீட்டதிகாரக்குழுவுக்கு ஒரு மனு அவருக்குச் சேரவேண்டிய பணத்தினைக் கோரிக் கொடுக்கவேண்டும், மற்றும் அத்தகைய கோரிக்கையுடைய பணம் கொடுக்க வேண்டியுள்ளது என்று மேல்முறையீட்டுக்குழு திருப்தியுறுவதாயின், அதனை வசூலிக்க கலக்டருக்கு ஒரு சான்றிதழ் வழங்கவேண்டும் என்பதுடன் கலக்டர் அத்தொகையினை பூமியிலிருந்துக் கிடைக்கவேண்டிய வருவாய் நிலுவையெனுமாறு வசூலிக்கவேண்டும்.

எனினும் கமட்டுத்தொழிலாளிக்கு பணம் உரியதாகிய தேதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் நல்கப்படவேண்டும்.

(2) இந்தச்சட்டத்தின் கீழ் அல்லது ஒரு திட்டம் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்ட விதியின் கீழ் ஏதேனும் நிதிக்கு உதவித் தொகையாக ஒரு முதலாளியிடமிருந்து உரிய ஏதேனும் தொகை மற்றும் ஒரு முதலாளியிடமிருந்து உரியதான ஏனைய பிற தொகை, அந்தத்தொகை நிலுவையாக இருக்குமாயின், நிலத்தின் மீதான பொது வருவாய் நிலுவையாக வசூலிக்கப்படலாம்.

37. இழப்பீடுகளை வசூலிக்க அதிகாரம்.—நிதி வகையில் ஏதேனும் உதவித் தொகையினைச் செலுத்துவதில் ஒரு முதலாளி தவறிழைத்தால் அரசு, அது தகுந்ததெனக் கருதும் விதத்தில் நிலுவைத் தொகையின் இருபத்தைந்து சதவீதத்திற்கு மிகாமல் அத்தகைய இழப்பீடுகளை அவரிடமிருந்து வசூலிக்கலாம்.

38. கமட்டுத்தொழிலாளிகளிடமிருந்து உரியதாகின்ற பணத்தினை வசூலித்தல்.—பிரிவு 21-ன துணைப்பிரிவு (3) அல்லது துணைப்பிரிவு (4) அல்லது துணைப்பிரிவு (7)-ல் அல்லது பிரிவு 22-ல் குறிப்பிடப்பட்ட ஒரு தீர்ப்பு அல்லது

முடிவின் கீழ் ஒரு கமட்டுத்தொழிலாளியிடமிருந்து ஒரு முதலாளிக்கு ஏதேனும் தொகை வரவேண்டியிருந்தால் முதலாளி அவராகவோ, இதன் சார்பில் அவரால் அதிகாரப்படுத்தப்பட்ட ஏனைய பிற நபர், முதலாளியின் மரணத்தின் காரியத்தில் உரிமைபெற்றவர்கள் அல்லது வாரிசுகள் ஏனைய பிற வசூல் முறைக்குக் குந்தகமின்றி அவருக்கு உரியதாகின்ற தொகையினை வசூலிப்பதற்காக மேல்முறையீட்டதிகாரிக்கு ஒரு விண்ணப்பம் நல்கலாம் என்பதுடன் அவ்வாறு ஏதேனும் தொகை உரியதாகின்றது என்று மேல்முறையீட்டதிகாரி திருப்திப்பட்டால் அது நிர்ணயிக்கின்றவாறு இலகுவான தவணை எண்ணிக்கையில் அத்தொகையினை நல்க ஆணையிடவேண்டும்.

39. இச்சட்டம் மற்றும் திட்டத்திற்கு ஒவ்வாத சட்டங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் பலன்.—(1) இந்தப்பிரிவின் தொடக்கத்திற்கு முன்னர் அல்லது பின்னர் உண்டுபண்ணப்பட்டிருப்பினும் ஏனைய பிற சட்டத்திலோ அல்லது ஏதேனும் தீர்ப்பிலோ ஒப்பந்தத்திலோ அல்லது சர்வீஸ் ஒப்பந்தத்திலோ எதுவும் ஒவ்வாதவாறு அடங்கியுள்ளபோதிலும் இந்தச்சட்டத்தின் மற்றும் திட்டங்களின் ஏற்பாடுகளுக்குப் பலனுண்டு.

(2) அரசு, அல்லது வாரியம் அல்லது கமிட்டி அல்லாமல் எந்த அதிகாரக் குழுவுக்கும் ஏதேனும் திட்டம் உருவாக்கவோ அல்லது கமட்டுத்தொழிலாளி மீது ஏதேனும் நன்மைகளை வழங்கும் அல்லது வழங்க உத்தேசிக்கும் ஏனையபிற செயலைச் செய்யவோ உரிமை கிடையாது.

40. வாரியத்தின் உறுப்பினர்கள் முதலியோர் அரசு ஊழியர்களாக இருத்தல்.—வாரியத்தின் அல்லது ஒரு கமிட்டியின் ஒவ்வொரு உறுப்பினரும் மற்றும் இந்தச் சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அலுவலரும் இந்திய தண்டனை விதித்தொகுப்பின் (1860-ன் மத்தியச் சட்டம் 45) பிரிவு 21-ன் பொருளுக்குள் ஒரு அரசு ஊழியராகக் கருதப்படுவார்.

41. இடர்களை அகற்றும் அதிகாரம்.—இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் ஒரு திட்டம் அல்லது ஏதேனும் தீர்ப்பு அல்லது இசைவிணக்கத்தினை நிறைவேற்றுகையில் ஏதேனும் இடர் எழுமாயின், அரசு, ஆணைவாயிலாக, இடரினை அகற்றும் நோக்கத்திற்காக தேவையென அல்லது உகந்ததெனத் தோன்றும் அத்தகைய ஏற்பாடுகளுக்கு முரணில்லாத எச்செயலையும் மேற்கொள்ளலாம்.

42. நல்லெண்ணத்துடன் மேற்கொண்ட செயலுக்குப்பாதுகாப்பு.—இந்தச் சட்டம் அனுசரித்து அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்ட திட்டம் அல்லது ஏதேனும் விதி அல்லது ஆணை அனுசரித்து நல்லெண்ணத்துடன் மேற்கொள்ளப்பட்ட அல்லது மேற்கொண்டிருப்பதாக உத்தேசிக்கப்பட்ட ஏதேனும் செயல் சம்பந்தமாக அரசு, அல்லது ஏனைய அதிகாரக்குழு அல்லது அலுவலருக்கெதிராக உரிமையியல் வழக்கோ குற்றச்சாட்டோ அல்லது பிற சட்டநடவடிக்கைகளோ தாக்கல் செய்யப்படக்கூடாது.

43. விதிகள் உண்டுபண்ணும் அதிகாரம்.—(1) அரசு, கெசற்று விளம்பரம் மூலம், இந்தச் சட்டத்தின் நோக்கங்களை செயல்படுத்துவதற்காக விதிகள் உண்டுபண்ணலாம்.

(2) குறிப்பாகவும் மேற்சொன்ன அதிகாரத்தின் பொதுத்தன்மைக்கு குந்தகமின்றியும் அத்தகைய விதிகள்,—

(எ) கமட்டுத்தொழிலாளிகள் மற்றும் முதலாளிகளின் : _

(பி) பதிவு செய்யப்பட்டதோ அல்லாததோவான சுமட்டுத்தொழிலாளிகளின் வேலை வாய்ப்பினையும் இந்தச் சட்டத்தில் தெளிவாக வகை செய்யப்படாத அத்தகைய வேலைவாய்ப்பின் வரையறைகள் மற்றும் நிபந்தனைகள் இவைகளை ஒழுங்கு செய்தல்,

(சி) ஏதேனும் முதலாளி, அவரது நிறுவனத்தில் பதிவு செய்யப்படாத சுமட்டுத்தொழிலாளிகளின் வேலைவாய்ப்பினை ஒழுங்கு செய்தல், கட்டுப்படுத்தல் அல்லது வேறு வகையில் கட்டுப்படுத்தல்,

(டி) குறிப்பிடப்படவேண்டிய அல்லது குறிப்பிடப்படலாமெனும் ஏனைய பிற காரியம்—இவைகளுக்காக வகை செய்யலாம்.

(3) இந்தச்சட்டத்தின் கீழ் உண்டுபண்ணப்பட்ட ஒவ்வொரு விதியும் அது உண்டுபண்ணப்பட்ட உடனே ஒரே கூட்டத்தொடரில் அல்லது இரண்டு கூட்டத்தொடர்களிலுமாக மொத்தம் பதினான்குநாட்கள் கூட்டத்தொடரில் இருக்கும் சட்டமன்றப்பேரவையில் தாக்கல் செய்யப்படவேண்டும். அவ்வாறு தாக்கல் செய்யப்பட்ட கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்னர் அல்லது அதனைத் தொடர்ந்துள்ள கூட்டத்தொடரில் விதியில் ஏதேனும் திருத்தம் உண்டுபண்ணினால் அல்லது விதி உண்டுபண்ணக்கூடாது என்று தீர்மானித்தால் அந்த விதிக்கு அதது காரியத்திலாவதுபோன்று திருத்தப்பட்ட விதத்தில் பலனிருக்கும அல்லது பலனிருக்காது, எனவே எவ்வாறுயினும் அத்தகைய திருத்தம் அல்லது தள்ளுபடி, அந்த விதியின் கீழ் ஏற்கனவே உண்டுபண்ணப்பட்ட ஏதேனும் காரியத்தின் செல்லுபடியாகும் தன்மைக்குக் குந்தகமின்றியே இருக்கும்.

அட்டவணை

[பிரிவு 2 (ஜெ) பார்க்கவும்]

1. இரும்பு மற்றும் உருக்கு சந்தைகள் அல்லது கடைகள்
2. துணி மற்றும் பருத்தி சந்தைகள் அல்ல து கடைகள்
3. மளிகைச் சரக்கு சந்தைகள் அல்லது கடைகள்
4. ரயில்வே தளங்கள் மற்றும் பொருட்கள் மண்டி
5. பொருட்களை ஏற்றவும் இறக்கவும் அத்துடன் இணைந்த அல்லது அதன் பொருட்டான பிற வேலைகளுக்கு தொழிலாளிகளை நியமிக்கும் நிறுவனங்கள்,
6. காய்கறி சந்தைகள் (உள்ளி மற்றும் உருளைக்கிழங்கு சந்தைகள் உட்பட்டவை)
7. உணவு தானியங்கள் ஏற்றவும் இறக்கவும் சுமக்கவும் அத்துடன் இணைந்த அல்லது அதன் பொருட்டான அத்தகைய பிற வேலைகளுக்கு தொழிலாளிகளை நியமிக்கின்ற நிறுவனங்கள்.
8. பஸ் நிலையங்கள், படகுத் துறைகள், தோணிகள் வந்திறங்கும் இடங்கள்.
9. வனப்பொருட்கள் விநியோகம் மற்றும் விற்பனை கூப்புகள், மர மற்றும் விறகு பண்டிகள்.
10. கற் சுரங்கங்கள்.
11. இந்த அட்டவணையில் எங்கும் எழுதப்படாததும் தொழிலாளிகளை வேலையிலமர்த்துகின்ற (மீன் மற்றும் இறைச்சி சந்தைகள் உட்பட) சந்தைகள் மற்றும் தொழிற்சாலைகள்.

GOVERNMENT OF KERALA

Local Administration & Social Welfare (C) Department

NOTIFICATION

G.O. (Ms) No. 98/82/LA & SWD. *Dated, Trivandrum, 15th May* 1982.

S. R. O. No. 728/82.—In exercise of the powers conferred by subsection (1) of section 142 of the Kerala Panchayats Act, 1960 (32 of 1960), and at the request of the Athiyannur Panchayat contained in its resolution No. I dated the 1st February, 1980, the Government of Kerala hereby declare that the provisions of law relating to Municipalities mentioned in the Schedule below, shall be extended to and be in force in the Athiyannur Panchayat area in Trivandrum District with effect from 1st August 1982.

SCHEDULE

Clauses (3), (4), (16) (28), (30), (33), and (39) of section 3, provisions of Chapters IX and X, sections 347, 349 to 352, 355, 359, 363, 364, and 365 in so far as they relate to the above Chapters of the Kerala Municipalities Act, 1960 (14 of 1961), and the provisions regarding penalties specified in Schedules V and VI of the said Act for contravention of sections 196, 197, 202, 204, 205, 206, 207, 209 to 213, 215, 216, 218 to 221, 224 to 227 and 245 and the Kerala Municipal Buildings Rules, 1968.

By order of the Governor,
M. DANDAPANI,
Special Secretary to Government.

Explanatory Note

(This does not form part of the notification but is intended to indicate its general purport).

Athiyannur Panchayat in Trivandrum District has requested to Government to extend certain provisions of Kerala Municipal Act, and the Building Rules, 1968 in its area. The Director of Panchayats, in consultation with the Chief Town Planner has recommended the request. Accordingly Government have decided to extend the provisions and regulations mentioned in the schedule to the Athiyannur Panchayat area. This notification is intended to achieve the above object.

GOVERNMENT OF KERALA

Transport, Fisheries and Ports (Transport C) Department

NOTIFICATION

No. 1372/TC2/82/TF&P. *Dated, Trivandrum, 2nd April,* 1982.

S. R. O. No. 729/82.—Whereas representation has been received by Government from the Stage Carriage Operator Shri O. Ahammadkoya, Thulaparambil Veedu, Narakkal, Ernakulam that the vehicle tax for the quarters ended on the 31st March, 1981 and 31st March, 1982 in respect of the stage carriage bearing Registration No. KLD. 9766 could not be remitted within the prescribed period due to financial strain and that extension of time for payment of vehicle tax in respect of this vehicle may, therefore, be granted;

And whereas, the Government are convinced that circumstances existed that the operator of the said stage carriage could not remit the vehicle tax in respect of the said stage carriage ordinarily kept for use in the State for the quarters ended on the 31st March, 1981 and 31st March, 1982 due to financial strain;

And whereas, the Government are convinced that non-operation of the said stage carriage due to non-payment of tax would have caused great inconvenience to the travelling public;

And whereas, the Government consider it necessary to extend in public interest the time for payment of the vehicle tax for the quarters ended on the 31st March, 1981 and 31st March, 1982 in respect of the said stage carriage;

